[திரு. ஜி.கே. மணி] [2008 ஏப்ரல் 17

எட்டாவது முதல் தொண்ணூற்று இரண்டாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது முதல் ஏழாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் – 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008–2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைமீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.72,58,99,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 4, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: